என்ற குறளுக்கு ஏற்ப, உங்கள் செயல்பாடு அமையட்டும். மக்கள் நிறைய எதிர்பார்க்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறீர்கள். அந்த எதிர்பார்ப்பை பூர்த்தி செய்யுங்கள். பட்டா பிரச்சினையில் நிச்சயமாக உங்கள் மேல் கிழக்குத் தொகுதி மக்கள், என்.எம்.ஆர்.புரம், காமராசபுரம் மக்கள் உண்மையிலேயே தெய்வமாக வழிபாட்டுப் பொருளாக உங்களை வைத்திருக்கிறார்கள். அவர்களுக்கு ஒரு காரியத்தைச் செய்து கொடுக்கிற முறையில், தமிழ்நாடு பூராவும் இந்தக் கோரிக்கை நிறைவேறக் கூடிய வகையில் நீங்கள் உதவ வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, மீண்டும் ஒரு முறை நன்றி தெரிவித்து, இந்த அளவோடு வார்த்தையை நிறைவு செய்கின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (21-8-2001) செவ்வாய்க்கிழமை காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-32 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்ட முறை விதிகளும் ஆணைகளும்

1. ஈரோடு முதன்மை கூடுதல் மாவட்ட நீதிபதி மற்றும் தலைமை குற்றவியல் நடுவர் திரு.ட்டி. சீமத்துரை அவர்களை சென்னை விற்பனை வரி மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தின் தலைவராக நியமித்திருப்பது குறித்து வணிக வரிகள் துறையின் 3-2-2001 ஆம் நாளிட்ட 30-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம்1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

2. ஈரோடு மாவட்டத்திலுள்ள ஈரோடு விற்பனைக் குழுவின்கீழ் செயல்படும் இருபத்திமூன்று ஒழுங்குமுறை விற்பனை அங்காடிப் பகுதிகளில் தேங்காய் (மட்டை உரிக்கப்படாதது, மட்டை உரிக்கப்பட்டது, கொப்பரை) விற்பனையை முறைப்படுத்துவதற்காக அப்பகுதிகளை அறிவிக்கையிடப்பட்ட அங்காடி பகுதிகளாக அறிவிக்கை செய்துள்ளது குறித்து வேளாண்மைத் துறையின் 12-9-2000 ஆம் நாளிட்ட 368 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1987 ஆம் ஆண்டு

தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனைச் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1989) 52 (4)(சி) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

3. இராமநாதபுரம் விற்பனைக் குழுவின் கீழ் செயல்படும் இருபது ஒழுங்குமுறை விற்பனை அங்காடிப் பகுதிகளில் கம்பு (அனைத்து வடிவங்களிலும்) சோளம் (அனைத்து வடிவங்களிலும்) கேழ்வரகு (அனைத்து வடிவங்களிலும்) சூரியகாந்தி விதைகள் (அல்லது) பருப்புகள் ஆகியவற்றின் விற்பனையை முறைப்படுத்துவதற்காக அப்பகுதிகளை அறிவிக்கையிடப்பட்ட அங்காடிப் பகுதிகளாக அறிவிக்கை செய்துள்ளது குறித்து வேளாண்மைத் துறையின் 13-9-2000 ஆம் நாளிட்ட 370 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனைச் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1989) 52(4)(சி) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

4. திருச்சிராப்பள்ளி அங்காடிக் குழுவின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள லால்குடி ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தின் அங்காடிப் பகுதியில் பருத்தி (விதையெடுக்காத கப்பாஸ் பஞ்சு, அரைத்த பஞ்சு (லின்ட்) கழிவுப் பஞ்சு) விற்பனையை முறைப்படுத்துவதற்காக அப்பகுதியினை அறிவிக்கையிடப்பட்ட பகுதியாக அறிவிக்கை செய்துள்ளது குறித்து வேளாண்மைத் துறையின் 2-11-2000 நாளிட்ட 412 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனைச் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1989) 52(4) (சி) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

5. 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு திடமற்ற சாராவி மற்றும் வார்னீஷ் (பிரஞ்சு பாலிஷ்) விதிகளில் சில திருத்தங்கள் செய்தது குறித்து மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறையின் 23-10-2000 ஆம் நாளிட்ட 225 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

6. 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு திடமற்ற சாராவி மற்றும் வார்னீஷ் (பிரஞ்சு பாலிஷ்) விதிகளில் சில திருத்தங்கள் செய்தது குறித்து மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறையின் 17-11-2000 ஆம் நாளிட்ட 231 ஆம்

2001 ஆகஸ்ட் 20]

எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

7. 2000 ஆம் ஆண்டு தமிழ்நாடு தெளிந்த சாராவி விதிகள் வகுப்பது குறித்து மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் 13-12-2000 ஆம் நாளிட்ட 238 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

8. 2000 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சிகள் (கேபிள் தொலைக்காட்சி இணைப்பிற்கான வரி விதிப்பு மற்றும் வசூல்) விதிகள் வகுப்பது குறித்து நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் 7-12-2000 ஆம் நாளிட்ட 175 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1939 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1939) 16(4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

9. 27-3-1998 ஆம் நாளிலிருந்து 12-1-1999 ஆம் நாள் வரையிலான கால அளவில் பருத்தி விதை எண்ணெய் மற்றும் அரிசி தவிட்டு எண்ணெய் ஆகியவற்றின் விற்பனை மீது 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் எந்தவொரு வணிகராலும் செலுத்தத்தக்க வரியைப் பொறுத்தமட்டில் மேற்சொன்ன கால அளவில் மேற்சொன்ன இப்பொருட்களின் விற்பனை மீது எந்த ஒரு வரியும் வசூலிக்கப்படவில்லை என்ற நிபந்தனைக்குட்பட்டு வரி விலக்களிப்பது குறித்து வணிகவரிகள் துறையின் 5-2-2001 ஆம் நாளிட்ட 18 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

10. இயலாமையற்றவர்களுக்காக திருவாளர்கள் ஹெலன் கெல்லர் சர்வீஸ் சொசைட்டி, மதுரை (பதிவு எண் 49/79) என்ற சங்கம் தயாரிக்கும் காகித உறைகள் மற்றும் குறிப்பேட்டிற்கான அட்டை, காலிகோ துணி, காகித உறை தயாரிப்புப் பணிக்கான மார்பிள் தாள், குறிப்பேடு தயாரிப்புப் பணிக்கான எழுதுபொருட்கள் ஆகிய மூலப்பொருட்களின் கொள்முதல் ஆகியவை குறித்து 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் செலுத்தத்தக்க வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிகவரிகள் துறையின் 12-3-2001 ஆம் நாளிட்ட 36 ஆம் எண்

அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

11. வணிகவரிகள் அறநிலையத் துறையில் 12-1-1998 ஆம் நாளன்று உருவாகி 12-1-1998 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டில் வெளியிடப்பட்ட II(1)/வவ(ம)அநி(a-9)/98 ஆம் எண் அறிவிக்கையில் திருத்தம் செய்தது குறித்து வணிக வரிகள் துறையின் 28-3-2001 ஆம் நாளிட்ட 44 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

12. 1999-2000 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சீட்டுக் கழகத்தின் பதினாறாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம்1/1956) 619ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

13. அண்ணா பல்கலைக்கழகத்தின் 1999-2000 ஆம் ஆண்டுக் கணக்குகளின் மீதான தணிக்கை அறிக்கை. [1978 ஆம் ஆண்டு அண்ணா பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1978) 26(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

14. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் 1999-2000 ஆம் ஆண்டிற்கான கணக்கின் மீதான தணிக்கை அறிக்கை [1970 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4/1971) 47(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

15. 1999-2000 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கோழியின வளர்ச்சிக் கழகத்தின் இருபத்து ஏழாம் ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)